IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

O.S.No.117/2022
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.50 PM.

வா.சா.2 சாட்சி சுமதி த.பெ.வேல்ராஜா

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 06.08.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தை வாதியாகிய எனது கணவர் தயார் செய்து நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தில் எப்போது வடகைக்கு வந்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மாதம் ரூ.3,000/- வாடகை செலுத்தி வந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. நான் மாதம் வாடகை ரூ.3,000/- செலுத்தவில்லை என்றும் அதனால்தான் அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. வீட்டிற்கு முன்பணம் 4 இலட்சம் கொடுத்தது சம்பந்தமாக எங்கு வைத்து எந்த தேதியில் கொடுத்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் எனது கணவருக்குதான் தெரியும். நான்

பிரதிவாதிக்கு வாடகை ரூ.3,000/— செலுத்தவில்லை என்றாலும் முன்பணம் ரூ. 4 இலட்சம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

4. வா.சா.1 சாட்சியத்தில் விடுபட்ட சங்கதிகள் நிரப்பும் விதமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி சட்டத்திற்கு முரணாக வெளியேற்ற முயற்ச்சி செய்கிறார்கள் என்று கூறியபோதும் அது எவ்விதமான முரணான சங்கதி என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் முன்பணம் ரூ.4 இலட்சத்தில் ரூ.50,000/— மட்டுமே தருவதாக கூறினார்கள்.

5. முன்பணம் ரூ.4 இலட்சத்தில் ரூ.50,000/— மட்டுமே தருவதாக பிரதிவாதிகள் கூறியதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் கூறி இருப்பேன். மேற்படி ரூ.50,000/— மட்டுமே பிரதிவாதிகள் தருவதாக வழக்குரையிலோ, வா.சா.1 சாட்சியத்திலோ இல்லாத சங்கதிகளை பொறுத்து தற்போது வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. 25.03.2018ம் தேதி 1ம் பிரதிவாதியும், வாதியும் வாடகை ஒப்பந்தம் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் மாத வாடகை ரூ.4,700/— என்றும் வட்டியில்லாத முன்பணம் ரூ.30,000/— என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி முறையிலேயே வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டது என்றும் அதை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வாடகை ஒப்பந்த பத்திரத்தில் 1வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7. மேற்படி வாடகை ஒப்பந்த பத்திரத்தை நான் படித்து பார்த்துதான் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வாடகை ஒப்பந்தம் 4 பக்கங்களை கொண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாடகை ஒப்பந்த

பத்திரத்தில் 4வது பக்கத்தில் அசல் ஒப்பந்த பத்திரம் 2வது பார்டி வசமும், இதன் நகல் 1வது பார்டி வைத்துக்கொண்டுள்ளோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. அதன் படி அசல் வாடகை ஒப்பந்த பத்திரம் வாதியிடமும், அதன் நகல் 1ம் பிரதிவாதியிடமும் உள்ளது என்றால் சரியல்ல. 2 அசல் ஒப்பந்தங்கள் இருந்தது. 1 வாதிக்கும், 2 வது வாதிக்கும் உயரியதாகும். மேற்படி 2 அசல் வாடகை ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது குறித்து பிராதிலோ, வா.சா.1 சாட்சியத்திலோ இல்லை என்றால் எனக்கு தெரியாது. வாதிக்குதான் தெரியும்.

9. மேற்படி 2 அசல் ஆவணங்கள் உள்ளதாக பிராதிலோ, வா.சா.1 சாட்சியத்தில் இல்லாத நிலையில் மேற்படி சங்கதிகளை நிரப்பும் விதமாக வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வாடகை ஒப்பந்தத்தில் உள்ள 2வது சாட்சி பால்பாண்டி 1ம் பிரதிவாதிக்கு உறவினர் என்று நான் குறியுள்ளதுபடி அவர் 1ம் பிரதிவாதிக்கு உறவினர் இல்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. மேலும், 1ம் பிரதிவாதி முன்பணமாக ரூ.4 இலட்சத்தை எந்த காலத்திலும் என்னிடமிருந்து பெறவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்து கொடுக்க முன்வரவில்லை என்பதால்தான் வெண்ணிலை ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்று நான் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் ஒப்பந்தத்தை

பதிவு செய்ய நான் முன்வரவில்லை என்பதாலையே வெண்ணிலை பத்திரம் ஏற்பட்டுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

11. 1ம் பிரதிவாதி வாதியிடமிருந்தும் எந்த காலத்திலும் முன்பணம் ரூ.4 இலட்சம் வாங்கவில்லை என்றாலும் முன்பாகத்தான் முன்பணத்தை கொடுத்தார் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 09.03.2019 தேதியன்று 1ம் பிரதிவாதி வாதிக்கு எந்த வாடகை ஒப்பந்தமும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 வாடகை ஒப்பந்தத்தை வாதியே மோசடியாக ஏற்படுத்தி 1ம் பிரதிவாதியின் கையெழுத்தை போட்டுள்ளார் என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ7 ஆவணமானது போலியான ஆவணம் என்பதால் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு நிலைநிற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதியால் போலியாக உருவாக்கப்பட்ட வா.சா.ஆ7 ஆவணத்தை பொறுத்து எவ்வித பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

13. 23.05.2018ம் தேதியன்று வாதியும், 1ம் பிரதிவாதியும் ஏற்படுத்திகொண்ட வாடகை பத்திரத்தில் வாடகை ரூ.4700/- என்றும் வட்டியில்லா முன்தொகை ரூ.30,000/- என்றும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அசல் வாடகை ஒப்பந்தம் வாதி வசம் உள்ளதை தவறாக பயன்படுத்தி வாடகை ரூ.3,000/- என்றும் முன்பணம் ரூ.4 இலட்சம் என்றும் ஒரு போலியான ஆவணத்தை உருவாக்கி 1ம் பிரதிவாதியின் கையெழுத்தை போலியாக ஏற்படுத்தியுள்ள ஆவணத்தில்தான் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14. அசல் வாடகை ஒப்பந்த பத்திரத்தில் நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வீட்டு பராமரிப்பிற்காக ரூ.3

இலட்சம் வாங்கியதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதி சாட்சியம் அளிக்க விடுப்பட்ட சங்கதிகளை பொறுத்து அதை நிரப்பும் விதமாக வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மேற்படி வீட்டை அவரது தேவைக்காகதான் என்னை காலி செய்ய கூறுகிறார் என்றாலும் சட்டத்திற்கு புறம்பாக எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 01.25 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.